# தமிழ் முரசு

THAMIL MURASU

முரசு : 1 • வைகாசி - 1982 • ஒலி : 7

## வன்முறையா? சீச்சி!

யாரையாவது கொல்லச் சொன்னேனா?
இல்லை... இல்லவே இல்லை
உறங்கமுடியாமல் உருள்பவனுக்குத் தெரியும்
மூட்டைப் பூச்சி ஒழிக்கப்படவேண்டும் என்று
அதைத்தான் நான் சொன்னேன்;
'உறிஞ்சும் பிராணிகளை நசுக்கிப்போடு' என்றேன்
வயலில் பயிரேற்றிடும் உழவனுக்குத் தெரியும்:
வேரோடும் வேரடி மண்ணோடும்
களைகள் பிடுங்கி எறியப்பட வேண்டும் என்று:
அதைத்தான் நான் சொன்னேன்;
'ஆள்வோனே ஆனாலும்
அவனை ஆட்டுவோனே யானாலும்
களையாய் முளைப்போனைக் களைந்திடு என்றேன்!

காலங்காலமாக நடைமுறையாயுள்ள
இதிலே எங்கே இருக்கிறது கொலை?
இதிலே எங்கே இருக்கிறது வன்முறை?
பசித்தவன் தின்னாததும் இல்லை
பகைத்தவன் சொல்லாததும் இல்லை!'
இந்தப் பழமொழி தெரியும் தானே?
எவரோ எதுவோ சொன்னால்
தயங்கி வீணில் தடைப்பட வேண்டாம்:
நான் சொன்னவழியில் நடந்துமேல்செல்லுங்கள்!

(நன்றி: அறிவியக்கம்)

ஆசிரியர்:
★ உமாகாந்தன்.

## ✱ செய் அல்லது செத்துமடி ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் முரசு

# முரசின் பார்வையில்

இதழ்-7

## வன்மையாகக் கண்டிக்கிறோம்.

1979 ம் ஆண்டு தற்காலிகமாக நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் இப்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமா கொடுமைக்கு மேலும் கொடுமையூட்டும் வகையில் இதற்கு பல திருத்தங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எவரையும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான அமைச்சர் விசாரணை முடிவடையும் வரை விளக்கமறியலில் இருந்து மாற்றி தாம் விரும்பும் எந்த இடத்திலும் தடுத்து வைப்பதற்கு சம்பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோத நடவடிக்கை என்பது அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களையும் குறிக்கும் என்று இன்னுமோர் திருத்தம்.

இவற்றுக்கு மேலாக, கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து பொலிசார் எடுக்கின்ற வாக்குமூலத்தைக் கொண்டே அவர் மீது வழக்குத் தொடரும் வகையில் ஓர் திருத்தம்.

கொடுமைகள் இந்தத் திருத்தங்களுடன் முடிந்துவிட்டதா? இளைஞர்களைக் கைது செய்து சட்டவிரோதமாக தடுப்பு முகாமில் வைத்திருப்பதையும் அவர்கள் கொடிய முறையில் துன்புறுத்தப்படுவதையும் ஏற்றுக் கொண்டு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும், மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அளிக்கப்படும் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள் ஆயுதப் படையினரால் அலட்சியப்படுத்தப்படுகின்றன.

விடுதலைப் போராளிகட்கெதிரான வழக்குகள் ஜூரிகள் இல்லாமல் விசாரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்யப்பட்ட பலரைக் காணவில்லை. அவர்கள் எங்கே என்று அரச சட்டத்தரணிக்கே தெரியவில்லை.

இனவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசின் கொடிய சட்டங்களையும், சட்ட அமுலாக்கலையும் மேவிவிடவில்லை.

தன்னைத் தார்மீக அரசு என்று சொல்லிக்கொண்டு, தான் ஆக்கிரமித்திருக்கும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்காக சிங்கள சிறீலங்கா அரசு தான் இத்தகைய கொடிய சட்டங்களை அமுல்நடத்துகிறது. மனிதாபிமானமற்ற இச்சட்ட அமுலாக்கலை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில் இத்தகைய சட்டங்களின் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடக்கிவிட ஆக்கிரமிப்பு அரசு முயலுமென நினைப்பின் அது வெறும் பகல் கனவு எனவும் கூறிவைக்கிறோம்.

சிறீலங்கா அரசின் இக்கொடிய சட்டங்களை சர்வதேச மன்னிப்புச் சபையும், சர்வதேச நீதியாளர்கள் சபையும் வன்மையாகக் கண்டித்துள்ளன. கண்டனத்துடன் நின்றுவிடாது இனவாதத் தென்னாபிரிக்க அரசை ஒதுக்கியதுபோல இனவாதச் சிறீலங்கா அரசையும் உலகநாடுகள் ஒதுக்கிவிட வேண்டும்.

எல்லாவற்றுக்குமிடையில் இன்னுமொரு விடயம். இந்த கொடிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இடம் சிறீலங்காவின் பாராளுமன்றம். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 'தமிழீழ விடுதலைப் பிரச்சாரம்' செய்யும் இந்த இடத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தை கூட்டணியினரால் தடுக்கமுடிந்ததா. அன்றி தாங்களுடன் நடத்தும் உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் பிரதிபலனாக இச்சட்டத்தின் ஒரு சரத்தையேனும் நீக்கமுடிந்ததா?

ஆயுதப் போராட்டத்திலீடுபட்டு கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை சட்டத்தைத் தாண்டி விடுதலை செய்த அரசு தமிழ் இளைஞர்கட்கெதிராகச் செய்யும் இந்த அநியாயத்தை.... அடக்குமுறையை உலகுக்கு பகிரங்கப்படுத்தாமல்.... இச்சட்டத்தை எதிர்த்து எதிர்ப்பியக்கங்களை நடத்தாமல்...... விடுதலை அணியாக இயங்காவிட்டாலும், எதிர்க்கட்சியாகக் கூட இயங்காமல் ஆக்கிரமிப்பாளரோடு... அராஜகச் சட்டங்களின் உரிமையாளர்களோடு... தமிழீழ விடுதலைப் போராளிகளின் குருதியைக் குடிக்கும் கோரப் பேய்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி கூடிக் கொட்டமடிக்கும் போதும் கூட்டணியினரையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்! விடுதலைப் போராட்டம் வேகப்படுத்தப்பட வேண்டும்!!

- இப்பிலாளன் சிவா -

சிறீலங்கா அரசினால் நடத்தப்பட்ட கடந்த பொதுத்தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தல் முடிந்ததும் தமிழீழம் பெற்றுத்தருவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்து அதன் காரணமாய் அவர்களுடைய வாக்குகளைப் பெற்று சிறீலங்கா பாராளுமன்றத்திற்குப் போய் ஐந்து வருடங்களாகிவிட்டன. கூட்டணியினர் இதுவரை சாதித்தது என்ன? ஆக்கிரமிப்பு அரசின் சூழ்ச்சிவலையில் விழுந்து ஆட்சியாளர்களின் விருந்துகளிலும், மந்திரிமார்களின் வரவேற்புகளிலும் கூடிக்குலாவியதுதான் கண்டமிச்சம். இனவாதத்தையே கொள்கையாகக் கொண்ட ... இதுவரை நடந்த இனக்கலவரங்கட்கு காரணகர்த்தாவாக இருந்த அமைச்சருடன்' இன்று கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்களாம். இதற்குத்தானா அன்று மக்களின் வாக்குகளைப் பெற்றனர்?

சிறீலங்காவின் பாராளுமன்றம் கோட்டேயில் திறந்துவைக்கப்படும் போது சங்கிலியன் தோப்பிலே தமிழீழத் தேசிய மன்றத்தினைக் கூட்டுவோம்' என்று முழங்கியவர்கள் இன்று செய்வது என்ன? விடுதலை வேகம் கொண்டு ஆக்கிரமிப்புப் படைகளின் அடக்குமுறைகளை எதிர்த்த எம்மினத்தவர்களை சிறையிலே சித்திரவதைப்படும் இவ்வேளையிலே கூட்டணியின் செயல் அதிபரோ அடுத்த தேர்தலுக்காக வெளிநாடுகளில் 'நிதிசேர்க்கும் புனிதமான பணி'யில் ஈடுபடுகிறார். இதுதான் தலைமையின் இலட்சணமா? இனிமேலாவது இந்தத் தலைவர்களை நாம் நம்புவதை விடுத்து ஆக்கபூர்வமான விடுதலைப் பணியில் ஈடுபடவேண்டும்.

மக்கள் சக்திதான் உலகில் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம். தமிழ்மக்கள் உண்மையான விடுதலைப் போராளிகளான இளைஞர்களின் கீழ் அணிதிரண்டு மக்கள் புரட்சியாக ஓர் ஆயுதப்புரட்சியை ஏற்படுத்தினால்தான் நம்முடைய இந்த மண்ணினை மீட்கமுடியும். இதற்கு தமிழ் மக்களிடையே உள்ள பேதங்கள் அகலவேண்டும்; ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஆண்டான்-அடிமை, உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்ற மனப்பான்மைகள் முற்றாக ஒழியவேண்டும். சாதி எனும் கேவலம் ஒழிக்கப்பட்டு, ஒன்றேகுலம் எனும் எண்ணம் மக்கள் மனதில் உண்டாகவேண்டும். தமிழ்மக்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற சிந்தனை ஏற்படவேண்டும். இதுதான் முதல் எம்மினத்துக்குத் தேவை. அதைவிடுத்து பேதங்களைக் காட்டி மோதப்பட்டுக்கிடப்பதால் பயனேதும் கிட்டப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வெளிநாடுகளில் இயங்கும் தமிழர் இயக்கங்களும் பிளவுபட்டு நிற்காமல் விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளில் இணைந்து இயங்க வேண்டும். நாளை... நாளை... என்று இனியுமே காலத்தைக் கடத்தாது விரைந்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். யார் போராடப் போவது என்று நினையாமல் அனைவரும் போராடப் புறப்பட வேண்டும்.

தமிழனின் வழக்கம் என்னவெனில் கூட்டம் கூடுவதும் கூக்குரல் இடுவதும் பின்னர் கலைந்துசெல்வதுமும். பழையதைப் பேசிக் காலத்தைக் கடத்துவது.... பாரதத்தைப் பற்றியும் இராமயணத்தைப் பற்றியும் தமிழன் இன்றும் பேசிக்கொண்டிருக்கையில் உலகமோ சந்திரமண்டலத்தையும் தாண்டி அதற்கு அப்பாலும் சென்றுவிட்டது. இந்த நிலை மாறவேண்டும். இப்படிப் பேசிப் பேசியே காலத்தை விழுங்கிய காரணத்தினால்தான் இன்று தமிழினம் தனக்கென்று ஓர் நாடின்றி அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஆளப்படும் இனமாக இருக்கிறது. காலத்துக்குக் காலம் தோன்றும் அரசியல்வாதிகளின் வார்த்தை நாடகங்களில் மயங்கி எமது இனம் உயிர்களையும், உடமைகளையும், உரிமைகளையும் பறிகொடுத்து அடிமைவாழ்க்கை வாழ்ந்து அல்லல்படுகிறது.

இந்த நிலை மாற வேண்டும். நம் ஈழத் தமிழ்மக்கள் யாவரும் ஒன்றிணைந்து உடனடியாக விடுதலை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதுவே தமிழீழ விடுதலைக்கான சிறப்பான வழியாகும்.

வாழ்க ஈழத்தமிழினம்!
மலர்க விரைவில் தமிழீழம்!

* * * * * * * * * * * * * * * * * * *

அன்பின் வாசகர்களே,

தொடர்ச்சியாக நீங்கள் தமிழ்முரசிற்கு தந்துவரும் ஆதரவு, அனுப்பிவரும் ஆக்கங்கள், பாராட்டுக்கள் அனைத்துக்கும் எமது நன்றிகள்! தொடர்ந்தும் உங்கள் ஆதரவு கிடைக்குமென நம்புகின்றோம். தமிழ்முரசுடனான சகல தொடர்புகளும் ....

UMAKANTHAN, (EDITOR)
10, RUE DES MARTYRS,
PARIS-75009,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கல்லறைகள் பேசும்.....

சங்கிலியன் பரம்பரை நாம் என்று தோள்தட்டி
சரித்திரக் கதைகளை சான்றுக்கு எடுத்துரைத்து
ஜம்பங்கள் காட்டி நடப்பது ஏதுமில்லை
அம்புலியை அவன் தொட்டு ஆண்டுகள் பல
சென்றனவையா - இனி
வெறும் வார்த்தைகள் வேண்டாம் செயலில்
இறங்கிடுவோம்.

நல்லதைச் செய்ய பலர் நாம் என்று துணிந்து நின்று
வல்லவராய் முந்நின்று நாட்டுக்கு நன்மைக் கொடுத்து
சொல்லெல்லாம் செயலாக்கிவரும் வீரத்தனம் - அந்த
புல்லுருவிகள் காட்டிக் கொடுப்பதனால்
மலர்ந்திடப் போகும் தமிழீழம் மறைந்திடப் போவதில்லை

சில்லறை சிலபேர் நின்று சிரிப்பதனால் - எங்கள்
சீரிய தியாகங்கள் வீணாகப் போவதில்லை
சொல் அறைகள் வேண்டாம் - நீவிர்
பொறுத்திருந்து பாரும் ஐயா - எம்
கல்லறைகள் பேசும் அப்போ - நீவிர்
காணுவீர் அந்தக் காட்சி!

- தெய்வம் -

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

தமிழ் முரசு நடத்திய கவிதைப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். போட்டியின் முடிவுகள் தமிழ் முரசின் ஆனி இதழில் வெளியிடப்படும்.

-ஆ.ர-

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தார்மீக' ஆட்சியிலே தமிழன்னை ஒருத்திக்கு நடந்த கொடுமை!

சிங்கள அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழீழத்திலே ஆயுதப்படைகளின் அட்டகாசங்கள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன. தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து தார்மீகத்துடன் கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்தும் போது இந்த அநியாயங்கள் என்றால் பேச்சுவார்த்தைகள் முடிந்தபின்.....

தமிழீழத்தில் ஒரு கைம்பெண்ணான 65வயதான தமிழன்னைக்கு நடந்த கொடுமையைப் பாருங்கள்....

யாழ்ப்பாணத்திலுள்ள கிராமமாகிய உரும்பிராயைச் சேர்ந்த திருமதி. அன்னலட்சுமி பொன்னுத்துரைதான் அந்த அன்னை. வீரன் சிவகுமாரனை பெற்றெடுத்த பாக்கியசாலிதான் இவர். கடந்த 8 வருடங்களாகவே ஆக்கிரமிப்பு அரசின் தொல்லைகளிடையே வாழும் இவரது வீட்டுக்கதவு சமீபத்தில் ஒருநாள் அதிகாலை 2.45 மணியளவில் 50க்கு மேற்பட்ட ஆயுதப்படையினரால் உடைக்கப்பட்டது. முன்கதவை உடைத்து வீட்டுக்குள் புகுந்த அவர்கள் சோதனை என்ற பெயரில் அந்த வீட்டிலுள்ள பொருட்களைத் தாறுமாறாகச் சீர்குலைத்தனர்.

அடுத்து அந்த அன்னையிடம் அவர்களது 'விசாரணை' தொடர்ந்தது. சிவகுமாரனின் மரணத்தைப் பற்றியும், உமா மகேஸ்வரனைப் பற்றிக் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன. முகுந்தனை தெரியுமா என்று கேட்கப்பட்டது. சமீபத்தில் 4 போராளிகள் வீட்டுக்கு வந்தார்களா என்று கேட்கப்பட்டது. இதன் பின்னர் சிவகுமாரனின் உடைந்த சிலையைப் பற்றியும் கேள்விகள் தொடர்ந்தன. சிவகுமாரனின் மரணவைபவத்திற்கு அமிர்தலிங்கம், சந்திரஹாசன் ஆகியோர் வந்தார்களா என்று கேட்கப்பட்டது.

இதற்கிடையில் அவர்களுக்கு சிவகுமாரன் இறந்துவிட்டாரா அல்லது இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்று சந்தேகம் வந்துவிட்டது. அவனெங்கே, எப்படி இறந்தான் அவனது உடல் தகனம் செய்யப்பட்டது என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன.

இறுதியில் அந்த வீரத் தமிழன்னை கூறுகையிலே "இந்த 65வயதிலும் நான் ஆயுதப்படையினரால் துன்புறுத்தப்படுகிறேன். தயவு செய்து எனக்குத் தொல்லைகள் தர வேண்டாம். இந்தக் கேள்விகட்கும் இந்த போக்கும் பதில் சொல்லி நான் களைப்படைந்து விட்டேன். உங்களுக்கு (ஆயுதப்படையினருக்கு) தேவையானால் என்னை தயவு செய்து நீங்கள் கைது செய்யுங்கள் அல்லது கொல்லுங்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமைகளை பகிரங்கப்படுத்துகிறார்

## வண. பிதா. போல் காஸ்பேர்ஸ்.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவரான வண. பிதா. போல் காஸ்பேர்ஸ் சமீபத்தில் ஒரு கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் . . . . .

* "பயங்கரவாதத் தடுப்பு ஏற்பாடுகள் சட்டம் இப்போது நிரந்தரமாகிவிட்டது. இது நாடாளுமன்ற மரபுப்படி சட்டமானாலும் கூட இது ஒரு அநீதியான சட்டம். இச்சட்டத்தின் அடிப்படையைவிட இச்சட்டத்தை மதிக்காமல் தமது விடுதலைக்குப் போராடி 'தீவிரவாதிகள்' என்ற பெயருடன் சிறைக்குச் செல்லவும் தமிழ் இளைஞர்கள் இன்று தயாராக உள்ளனர் என்று தெரிகிறது."

* "இச்சட்டம் காட்டுமிராண்டித்தனமும் மிலேச்சத்தனமும் நிறைந்த ஒரு சட்டமாகும் - அப்பாவி மக்களை இனந்தெரியாத நபர்கள், நினைத்த நேரங்களில் கைது செய்யவும் தாம் விரும்பும் இடங்களில் தடுத்து வைக்கவும் முடியும்."

* "இச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்யும் போது அவர் ஏன் கைது செய்யப்படுகிறார் என்பதற்கான காரணம் கூறப்படுவதில்லை. அவரைக்கைது செய்யும் அதிகாரி தான் யார் தனது பெயர் என்ன என்பதையும் வெளியிடுவதில்லை. கைதுசெய்யப்படுபவர் எங்கு கொண்டு செல்லப்படுகிறார் என்பதும் அவருக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பதும் அவரது உறவினர்கட்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. சட்டத்தரணிகள் அவர்களைப் பார்க்கமுடியாது."

* "இந்நிலையில் 72 மணித்தியாலங்கள் பாதுகாப்புப் படையினர் ஒருவரை வைத்திருக்க முடியும். அதன்பின் அமைச்சரோ அவரது அதிகாரியோ தடுப்புக்காவலில் 18 மாதங்கட்கு அவரை வைக்கமுடியும். இச்சட்டத்தின் கீழ் சித்திரவதைக்கு இடமில்லாத போதும் நடைமுறையில் மிலேச்சத்தனமான சித்திரவதை நடைபெற்றுவருகிறது. அண்மையில் இச்சட்டத்துக்கு கொண்டுவரப்பட்ட திருத்தப்படி அமைச்சரோ அதிகாரியோ, தனக்கு விரும்பிய எந்த இடத்திலும் விசாரணை முடியும்வரை ஒருவரைக் காவலில் வைக்கமுடியும்."

* "இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் சில குடும்பங்களை சென்று பார்த்தேன். தாய், தந்தையர், மனைவி குழந்தையர் கண்ணீர் வடிக்கிறார்கள். 'உங்களுக்கு உங்கள் கணவன் இனிக் கிடைக்கமாட்டான்' என்று கூறிக் கைது செய்து கொண்டு செல்கிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "சட்ட விரோதமான செயல்களுள் எதற்கும் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படுவதில்லை. வெளியாகவில் சட்டவிரோதமாக வைக்கப்பட்ட புத்தர்சிலைக்கு எதிராக.... அச்சிலையை வைக்கக் காரணமாக இருந்த அமைச்சருக்கு எதிராகவி ச்சட்டம் பாயவில்லை."

* "அப்பாவித் தமிழ் இளைஞர்களை நசுக்குவதற்கும் அடக்கு வதற்கும் அவர்களது தேசிய உணர்வை முறியடிக்கவுமே இச்சட்டம் ஏவி விடப்படுகிறது. இச்சட்டத்தின் பயங்க ரவாதம் மறையவில்லை. தமிழ் இளைஞர்களிடையே ஏற்ப ட்டிருக்கும் சில கருத்து வேறுபாடுகளாலேயே பயங்கர வாதம் குறைந்துவிட்டது போன்ற தோற்றம் இன்று கா ணப்படுகிறது."

* * * * * * * * * * * * * * * * *

## அது எப்போது???

அவன்
அவள்
அவர்கள் - ஏன்?
அத்தனை பேரும் அருகதையற்றவர்கள்.

அதனை சுட்டிக்காட்டும் சுட்டுவிரலுடன்
கூட்டு இணையா
அந்தத்தலை மூன்றும்!

ஆமாம்! என்னைத்தான்.
அந்த நான்
அந்த நானேயான அவள்
அப்பா அம்மா
அக்கா தங்கை
அண்ணன் தம்பி
அத்தனைக்கும் பின்னால் -
அருந் தமிழ்
அதற் கென்று ஒரு நாடு
அதுதான் 'தமிழீழம்'
அப்படி யென்றிருந்து விட்டால்!
அது எப்போது???

- கோமதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வேட நாடகங்கள்.



பாலஸ்தீனிய போர்ப்பயிற்சி கொலைவெறி.

நாம் இழந்த மண்ணை மீட்பதற்கு ஆயுதப் போராட்டமே சரியான வழி எனத் தீர்மானித்து அவ்வழியே விடுதலைப் போராட்டம் நடத்தும் பாலஸ்தீனியர்களை விடுதலைப் போராளிகள் எனப் போற்றி அவர்கட்கு தனது நாட்டில் தூதுவர் மட்ட அந்தஸ்தும் கொடுத்திருக்கும் சிறீலங்கா அரசு நாம் இழந்த மண்ணை மீட்கப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் போராளிகளை அராஜகச் சட்டங்கள் மூலம் சிறையிட்டுச் சித்திரவதை செய்வதும் அவர்களது தலைகட்கு விலை பேசுவதும்...

பாலஸ்தீனியரின் வீரம் பற்றி பல கதை பேசும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஈழ விடுதலைப் போராளிகளை தங்கள் பங்காளிகளாக ஏற்காமல், பயங்கரவாதிகள் என்று கூறுவதும்

அற்புதமான இரட்டை வேட நாடகங்கள்தான். ஆனால் இன்னும் எத்தனைகாலம் இந்த வேடங்கள் கலையாமலிருக்கும்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சுச் செய்திகள்;

## ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம்.



பிரான்சின் ஜனாதிபதி மித்திரன் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றை ஜப்பானுக்கு மேற்கொண்டார். கடந்த 124 வருடங்களில் ஜப்பானுக்கு விஜயத்தை மேற்கொண்ட முதலாவது பிரான்சின் ஜனாதிபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமது விஜயத்தின்போது மித்திரன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக பிரான்சு அதிகளவு விவசாய உற்பத்திப் பொருட்களையும், விமானம், ஹெலிகொப்டர், யுரேனியம் போன்றவற்றையும் ஜப்பானுக்கு விற்பனை செய்ய இருக்கிறது. இது தவிர ஜப்பானின் முக்கிய தொழிற்கூடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்

## தொலைக்காட்சிச் சேவை மறுசீரமைக்கப்படும்.

பிரான்சின் தொலைக்காட்சிச் சேவை மறுசீரமைக்கப் படவிருக்கிறது. தற்போது இருக்கும் நிர்வாக இயக்குநர் சபை கலைக்கப்பட்டு விரைவில் புதிய நிர்வாக இயக்குநர் சபை நியமிக்கப்பட இருக்கிறது. புதிய நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்படும். அத்தோடு தற்போது இயங்கும் அரசுக்கு சொந்தமான 3 சேவைகளைவிட தனியார் தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பிக்க அனுமதியளிப்பது தொடர்பாகவும் அரசு ஆராய்ந்து வருகிறது.

## இஸ்ரேலிய தூதரக அதிகாரி கொலை!

பாரிஸில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் இனந்தெரியாத நபரால் கொல்லப்பட்டார். சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. இக் கொலைகளை தாமே செய்ததாக லெபனானைச் சேர்ந்த இயக்கமொன்று பெய்ரூத்திலிருந்து அறிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அதிகரிப்பு!

பிரான்சின் ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்குமான பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சர்வதேசப் பயங்கரவாதியான கார்லோஸ் எந்தவேளையிலாவது தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று கருதியே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரான்சில் சிறைவைக்கப்பட்டிருக்கும் தனது சகாக்களை விடுதலை செய்யாவிடில் தான் தக்க பதில் நடவடிக்கை எடுப்பேன் என்று கார்லோஸ் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்கல அனுப்பல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனுடன் இணைந்து பிரான்ஸ் யூன் மாதம் விண்வெளிக்கு அனுப்பவிருந்த ஆய்வு வாணவேளர்த்தி திட்டமிட்ட திகதம் அனுப்பப்படாது. போலந்தில் பிரகடனப்படுத்தப்பட்ட இராணுவச் சட்டத்தோடு சோவியத் தொடர்பு கொண்டதை கண்டித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இவ்விண்வெளி ஆய்வு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் விமானக் கொள்வனவு.

இந்தியா பிரான்சிடம் கொள்வனவு செய்த மிராஜ்-2000 ரக விமானங்கள் 1984-85க்கிடையில் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரான்ஸ் - பிரிட்டன் பிளவு வலுக்கிறது.

ஐரோப்பிய வர்த்தக சமூகத்திற்கு நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் பிரான்சின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாகவும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு வலுவடைந்து கொண்டே செல்கிறது. விரைவில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய நாடுகளின் உச்சி மாநாட்டில் இப்பிரச்சனை உச்சக்கட்டத்துக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பொலிசாருக்கு அதிக அதிகாரங்களா?

அடையாளச் சோதனைகள் தொடர்பாக பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கக்கோரும் மசோதா நேற்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம் மசோதா பற்றி அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் இடையேயே பலத்த கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இஸ்ரேலியத் தூதரகம் தாக்கப்பட்டது!

பாரிலிலுள்ள இஸ்ரேலியத் தூதரகம் இனந்தெரியா நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகியது. இச்சம்பவத்தின் போது எவரும் காயமடையவில்லை. காவலுக்கு நின்ற பிரெஞ்சுப் பொலிஸ்வீரர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். பாலஸ்தீனிய இயக்கமே இதற்கு காரணம் என இஸ்ரேல் தூதரகம் குற்றம் சாட்டியுள்ளது. சமீபகாலமாக பிரான்சில் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டணியினர் கியூபெக்கைப் பின்பற்றப் போகிறார்களா அல்லது கோட்டைக்குப் போகப் போகிறார்களா....?

கடந்த ஏப்ரல் மாதம் 17ம் திகதி கனடாவின் மொன்றியேல் நகர் விழாக்கோலம் பூண்டது. காரணம் அன்றுதான் கனடாவுக்கு அரசியல் நிர்ணயச் சட்ட அதிகாரம் பிரிட்டனால் வழங்கப்பட்டது. 1931ம் ஆண்டு கனடா சுதந்திரம் பெற்றிருந்தாலும் இப்போதுதான் இந்த அதிகாரத்தை கனடா பெற்றிருக்கிறது. இதையொட்டித்தான் கனடா விழாக்கோலம் பூண்டது. எலிசபெத் மகாராணியார் கனடாப் பிரதமர் ட்ரூடோவிடம் புதிய அதிகாரத்தைக் கையளித்தார்.

கனடாவின் இதர மாநிலங்கள் யாவும் மகிழ்வுடன் பங்குபற்றிய இவ்விழாவிலே பிரிவினையை வேண்டி நிற்கும்... பிரெஞ்சு மொழி பேசும் மக்களைக் கொண்ட கியூபெக் மாநிலம் மாத்திரம் பங்குபற்றவில்லை. மாறாக மகாராணியாருக்கு முன்னாலேயே மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கியூபெக் மக்கள் நடாத்தினார்கள். இதற்கு தலைமை தாங்கிய கியூபெக் மாநில முதல்வர் திரு. றெனி லெவெஸ்கியூ உணர்ச்சி பொங்க உரையாற்றுகையில் 'இந்த அதிகாரமாற்றம் எங்களுக்கு இல்லை. ஏனென்றால் நாங்கள் கனடியர்கள் அல்ல. நாங்கள் கியூபெக்கியர்கள். எங்கள் மொழி, கலாச்சாரத்துக்கு ஏற்படும் அழிவுகளை நாம் அனுமதிக்கமாட்டோம். கியூபெக் என்ற தனிநாட்டினை அடையும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம்' என ஆயிரக்கணக்கான மக்களின் ஆரவாரத்துடன் கூறினார்.

இதேவேளையில் தனிநாடு கேட்டு போராட மக்களின் ஆணையைப் பெற்று இன்று போராட்டத்தினை மறந்து மாவட்ட சபைகட்கு அதிக அதிகாரம் கோரி பேச்சுவார்த்தை நடத்தி வரும் கூட்டணியினர் கியூபெக்கைப் பின்பற்றி சிறீலங்காவின் புதிய பாராளுமன்றத் திறப்புவிழாவை பகிஷ்கரிக்கப் போகிறார்களா....? அல்லது கொள்கையை அடைவு வைத்து... மக்களுக்களித்த ஆணையை காற்றில் பறக்க விட்டு... சிறீலங்காவின் அடிமைகள் நாங்கள் என்று அறுதிச் சாசனம் இட்டுக் கொள்வதற்காக கோட்டைக்கு... சிறீலங்காவின் புதிய பாராளுமன்றத்திற்கு போகப் போகிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிந்திய செய்திகள் :

## இளைஞர் கோஷ்டி - கடற்படை துப்பாக்கிப் பிரயோகம்!

ஜீப்பில் சென்று கொண்டிருந்த கடற்படை வீரர்கள் மீது திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்த இளைஞர் கோஷ்டி மீது கடற்படையினரும் திருப்பிச் சுட்டனர். எனினும் இளைஞர் கோஷ்டி அங்கிருந்து தலைமறைவாகிவிட்டது. இச்சம்பவத்தின்போது இரு கடற்படை வீரர்கள் காயமடைந்தனர். மூளாய் பாலவெட்டை அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக 21.04.82 இரவு 7.30க்கு இச்சம்பவம் நடந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

## சிறீலங்காவில் பத்திரிகைச் சுதந்திரம் படும்பாடு!

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுமீது ஆஜர்செய்யப்பட்ட எட்டுத் தமிழ் வாலிபர்களையும் புகைப்படமெடுக்க முயன்ற வீரகேசரிப் புகைப்படப் பிடிப்பாளர் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டதுடன் மிகமோசமான முறையில் அவமதிக்கப்பட்டுள்ளார். அவர் சோதனையிடப்பட்டதுடன் அவரது கமராவிலுள்ளிருந்து புகைப்படச் சுருளும் பறிக்கப்பட்டது. அத்தோடு இதுபற்றி பத்திரிகையில் எழுதக்கூடாது என்று எச்சரிக்கையும் விடப்பட்டது.

## பாரிஸில் குண்டு வெடிப்பு!

பாரிஸின் ஜனசந்தடி மிக்க சாம்ப்ஸ் எலிஸே பகுதியில் 22ந் திகதி காலை 9 மணியளவில் கார் ஒன்றினுள் வைக்கப்பட்ட குண்டு வெடித்து பெரும் சேதத்தை உண்டாக்கியது. இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 63 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து பிரான்ஸ் அரசு பிரான்ஸிலிருந்து இரு சிரிய ராஜதந்திரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. சர்வதேச பயங்கரவாதி கார்லோசுக்கும் இச்சம்பவத்திற்கும் தொடர்பு உண்டா என்பது பற்றியும் ஆராயப்படுகிறது. அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களையடுத்து அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தவும், அதற்கு மேலதிகமாக 2000 பொலிஸ் வீரர்களைச் சேர்க்கவும் நாட்டின் எல்லைகளில் சோதனைகளை வலுப்படுத்தவும் அடையாளச் சோதனைகளை அதிகரிக்கவும், வெளிநாட்டினருக்கு விசா வழங்கலைக் கட்டுப்படுத்தவும், அரசியல் அடைக்கலம் வழங்குவதை மீளப்பரிசோதனை செய்யவும் தீர்மானித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் சினாய் பகுதியைக் கையளித்தது.

காம்ப் டேவிட் சமாதான உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி இஸ்ரேல் தான் கைப்பற்றிய சினாய்ப்பகுதியை எகிப்திடம் ஏப்ரல் 25ந் திகதி கையளித்தது. இஸ்ரேலிய மக்களின் பலத்த எதிர்ப்பினிடையே இக்கையளிப்பு நடந்தது குறிப்பிடத்தக்கது.

## தென். ஜோர்ஜியா துறைமுகத்தை பிரிட்டன் மீண்டும் கைப்பற்றியது.

போக்லண்ட் தீவுகளின் முக்கிய துறைமுகமான தென் ஜோர்ஜியா துறைமுகத்தை பிரிட்டனின் கடற்படையினர் மீளக் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவத்தில் ஆர்ஜென்டீனத் துருப்புக்கள் பிரிட்டனின் துருப்புக்களிடம் சரணடைந்து விட்டன.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## சிந்திய முத்துக்கள்........

* "......இன்றைய இளைஞர்களின் செயல் இயக்கத்துக்கு மாத்திரமல்ல; தமிழினத்துக்கே சோதனைக்காலம். ஒரு சில இளைஞர்களிடம் ஒரு சில துப்பாக்கிகள் இருக்கலாம். அதனைக் கொண்டு இனத்தைக் காப்பாற்றி விட முடியுமா?...."

— திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

* "வன்முறைச் செயல்களில் மட்டுமே நம்பிக்கை கொண்டோர் எந்தவொரு இனமோ அல்லது நாடோ என்றும் விடுதலையோ விமோசனமோ பெறமுடியாது. இதற்கு ஈரான் மக்களும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் பல்லாண்டுகளாக நடத்திவரும் இத்தகைய போராட்டங்கள் நல்லதொரு படிப்பினையாகும்.

— திரு. அமிர்தலிங்கம் -

* "இந்த அரசாங்கத்தின் சேவைகளையும் உதவிகளையும் உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் அரசுடன் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டு ஒற்றுமையைப் பேணிவருகின்றது. இந்நிலையில் இங்குள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் எம்மை ஏன் ஆதரிக்கக்கூடாது?

— திரு. K.W. தேவநாயகம். —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழம் - தமிழ் உலக - சிறீலங்கா செய்திகள்:

## கைது செய்யப்பட்ட இளைஞர்கட்கு கடும் சித்திரவதை

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். (குட்டிமணி, ஜெகன் போன்றோர் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படும் போது இராணுவத்தாரால் கண்கள் கட்டப்பட்டே கொண்டுவரப்படுகிறார்கள். இது தவிர பல இளைஞர்கள், தடுப்புக்காவலில் ஆயுதப்படையினரின் கோரத் தாக்குதல்கட்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

## பயங்கரவாதிகள் தப்பி ஓடினர்?

வவுனியா - கண்டி வீதி 128 வது மைல் கல்லில் மறைந்திருந்த பொலீசார் இரு பயங்கரவாத முகாமை கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கின்றனர். இவ் வேட்டையின்போது அங்கிருந்த 3 பயங்கரவாதிகள் தப்பி ஓடிவிட்டதாகவும் பெருமளவு வெடிமருந்தும், துப்பாக்கிகள், நகைகள் ஆகியனவும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஓர் பொலீஸ் நிலையத்தைத் தாக்கும் திட்டம், சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரைப் பணயக்கைதியாக்கும் பயங்கரவாதிகளின் நோக்கமும் முறியடிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கின்றனர்.

## தந்தை - சிந்தனைச் சிற்பி நினைவு விழாக்கள்.

தந்தை செல்வா, சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை ஆகியோரது நினைவுவிழாக்கள் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெற்றன. யாழ். கூட்டத்தில் உரையாற்றிய கூட்டணித் தலைவர்கள் ஒற்றுமையை சிதறவிடக்கூடாது எனும் கொள்கையை வலியுறுத்திப் பேசினார். வவுனியா நினைவுக் கூட்டத்தில் திரு. தா. சிவசிதம்பரம், கோவை மகேசன், ஈழவேந்தன் உட்பட பலர் பேசினர். இங்கு பேசும்போது ஈழவேந்தன் ஒரு கட்டத்தில் 'தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு காப்புறுதி செய்திருக்கும் தலைவர்கள் தமது இனத்துக்கு காப்புறுதி செய்யத் தவறிவிட்டார்கள்' எனக் கூட்டணித் தலைமையை குற்றம் சாட்டினார்.

## யாழ். நூலக புனரமைப்பு நிதி.

யாழ். நூலக புனரமைப்புக்கு இதுவரை 20 லட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டிருக்கிறது. இதில் 10 லட்சம் ரூபாவை உலக திருச்சபைகள் கூட்டம் வழங்கியுள்ளது. இருந்தபோதும் மேலதிக அனைவரும் அன்பளிப்புகள் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சிங்களக் காடையரால் தாக்கப்பட்டனர்!**

சிவனொளிபாதமலைக்குச் சுற்றுலாச் சென்ற யாழ். பல்கலைக் கழக மாணவ - மாணவியர் எக்காரணமுமின்றி சிங்களக் காடையரால் கோரமாகத் தாக்கப்பட்டனர். பௌத்தபிக்கு ஒருவர் முன்னிலையிலேயே இத் தாக்குதல் நடைபெற்றதாம்.

**விமலராசாவை விடுதலை செய்யாவிட்டால் விரைவில் நேரடிப் போராட்டம்!**

எக்காரணமுமின்றி கடந்த இருவருடத்துக்கு மேலாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக் கழக மாணவன் விமலராசாவை விடுதலை செய்யாவிட்டால் விரைவில் நாம் அஞ்சா நெஞ்சத்துடன் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக மட்டக்களப்பு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

**தமிழீழத்தை இலங்கையில் பிரகடனம் செய்யும்படி வைகுந்தவாசனிடம் கேட்டேன் - அமிர்.**

இலங்கையில் வந்து தமிழீழத்தை பிரகடனம் செய்யும்படி திரு. வைகுந்தவாசனிடம் கேட்டேன். அவர் அப்படிச் செய்தால் தம்மை பொலிஸ் கைது செய்யாதென்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்டார் என அமிர் பத்திரிகைக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் ஈழவிடுதலைப் பிரகடனம் செய்ய மக்களாணையைப் பெற்ற அமிர் விடுதலைப் பிரகடனம் செய்ய ஏன் வேறொருவரை நாடுகிறார் என்று விடுதலைவாதிகள் வியப்படைந்துள்ளனர்.

**சங்கிலியன் தோப்பின் மகிமையை அழிக்க முயற்சி**

நல்லூர் சங்கிலியன் தோப்பின் மகிமையை அழித்து அங்கு மண்டபம் ஒன்றைக் கட்டும் முயற்சியில் காணிக்குரித்த ஆதீனயாளர் ஈடுபட்டுள்ளதாகவும் அதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூட்டணியினரும் தம்மோடு இணைந்து இச்செயலை எதிர்க்க வேண்டுமெனவும் சிறீலங்காவின் உள்நாட்டமைச்சர் திரு. தேவநாயகம் தெரிவித்துள்ளார். கூட்டணித் தலைவர்களும் இதனை ஏற்றுள்ளனர்.

**இந்து மாநாட்டை இளைஞர் சங்கம் பகிஷ்கரிக்கிறது.**

நாட்டின் பல பாகங்களிலும் அசம்பாவிதங்களால் அழிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் புனரமைக்கப்படாத நிலையில் அரசின் ஆதரவுடன் நடக்கும் உலக இந்துமாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக வவுனியா சித்தானைக்குட்டி இளைஞர் சங்கம் சிறீலங்காவின் இந்துசமய கலாசார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம்.**

தமிழ்த் தொகுதியான பட்டிருப்பிலுள்ள கிராமங்களான, கெவிளியாமடு, சுவாமிமலை, புளுகாமுனை ஆகியவைகளில் சிறீலங்கா அரசின் மறைமுக ஆதரவுடன் சிங்கள நாட்டிலிருந்து பௌத்த சிங்களவர் குடியேற்றப்படுவதை எதிர்த்தும் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று கோரியும் பட்டிருப்பு பா.உ. திரு. கணேசலிங்கம் தலைமையில் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டது.

**கூட்டணித் தலைமையின் போக்கைக் கண்டித்து தங்கத்துரை கண்டனம்!**

சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் கூட்டணித் தலைமையின் போக்கை திருமலை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் தங்கத்துரை வன்மையாகச் சாடியுள்ளார். இத்தகைய போக்கு இளைஞர்களுக்கு தளர்ச்சியையும், சலிப்பையும் கொடுத்துள்ளது என்றும் எந்தவிதமான தீர்வு தந்தாலும் பயனில்லை தமிழீழம் ஒன்றே முடிவான வழியென்றும் மேலும் அவர் கூறியுள்ளார். தங்கத்துரையின் கூற்று விடுதலைப் போராளிகளுக்கு தெம்பையும் கூட்டணித் தலைமைக்கு கசப்பையும் கொடுத்துள்ளதாம்.

**தங்கம் கடத்திய சிங்கள அரசியல்வாதி பிடிபட்டார்**

பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களையும் கைக்கடிகாரங்களையும் கடத்திய மகியங்கனையைச் சேர்ந்த இளம் சிங்கள அரசியல்வாதியொருவர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டார். இந்த மோசமான செயலில் ஈடுபட்ட அரசியல்வாதி ஐ.தே.க.வை சேர்ந்த மகியங்கனை எம்.பி. எனக் கருதப்படுகிறது.

**சிறீலங்கா பிரதி பொலிஸ் மா அதிபர் மீது லண்டனில் திருட்டுக் குற்றமும் தண்டனையும்!**

சிறீலங்காவின் தற்போதைய பிரதி பொலிஸ் மா அதிபரும் முந்நாள் புலனாய்வுத்துறை இயக்குநருமான திரு. ஹெர்பல் இலங்கதிலகாவுக்கு திருட்டுக் குற்றச் சாட்டின் பேரில் லண்டன் வெல்ஸ் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் 50 பிரிட்டிஷ் பவுண் அபராதமும், 50 பவுண் செலவுத் தொகையும் கட்டுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. நெல்போர்ட்டிலுள்ள கடையொன்றில் இவர் சில பொருட்களைத் திருடினாராம்.

**பிரிட்டிஷ் எம்.பி. சிறீலங்கா அரசால் நாடு கடத்தப்பட்டார்.**

சிறீலங்காவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் இடதுசாரி அணியைச் சேர்ந்தவரும் எம்.பியுமான திரு. ரெட் கிராண்ட் (TED GRANT) அவர்களை சிறீலங்கா அரசு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளது. இவர் பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழ்த்தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையை வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'விடுதலை இயக்கத்தைக் கூறுபோட அனுமதியாதீர்' கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள்.

'தந்தை செல்வா தன் உடல், பொருள் அனைத்தையும் தியாகம் செய்து கட்டியெழுப்பிய விடுதலை இயக்கத்தைக் கூறுபோடாமல் மேலும் பலப்படுத்தி எமது இலட்சியத்தை வென்றெடுக்க இளைஞர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும்' என்று திருநெல்வேலியில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு விழாவில் கூட்டணித் தலைவர்கள் இளைஞர்கட்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பரந்தன் வேலை நிறுத்தம் தொடர்கிறது.

1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி ஆரம்பமாகிய பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது. தொழிற்சாலையின் ஊழியர்களில் 80%க்கு மேற்பட்டோர் தமது தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாக்கவும் வேலை மறுக்கப்பட்ட ஊழியர்கட்கு மீண்டும் வேலை வழங்கவேண்டுமெனக் கோரியும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இப்போராட்டத்துக்கு ஈழத்தின் அனைத்து முற்போக்கு இயக்கங்களும் ஆதரவு வழங்கியுள்ளன.

## சிறுவலைச் செய்திகள்:

☆ கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஆயுதப்படையினரால் கடும் சித்திரவதைகட்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

☆ அ.இ. தமிழ் காங்கிரசின் சிரேஷ்ட உபதலைவராகிய திருமதி அந்தோனியா சிவநாதன் கட்சியின் கொழும்புக் கிளை தமிழ்ஈழக் கொள்கையை முன்வைத்ததை எதிர்த்து கட்சியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

☆ இரண்டாகப் பிளவுபட்டிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி இப்போது மூன்றாகப் பிளவுபட்டுவிட்டது. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஒருபிரிவும் அநுரா தலைமையில் அடுத்தபிரிவும் மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் மூன்றாவது பிரிவும் இயங்குகின்றன. விரைவில் சிறிமாவோ - அநுரா பிரிவுகள் இணையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

☆ மாவட்ட அபிவிருத்திச் சபைகட்குத் தனியாக நிதி ஒதுக்க முடியாது என்று சிறிலங்காவின் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.


☆ 1985ம் ஆண்டு தொடக்கம் சிறிலங்காவின் புதியபாராளுமன்றம் அமைந்திருக்கும் சிறீ ஜயவர்த்தனபுர சிறிலங்காவின் நிர்வாகத் தலைநகராக இயங்கத் தொடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்:

## ஃபோக்லண்ட் தீவுகள்:

### பிரிட்டனின் தீவை ஆர்ஜென்ரீனா ஆக்கிரமித்தது.




அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள பிரிட்டனுக்குச் சொந்தமான ஃபோக்லண்ட் தீவுகளை ஆர்ஜென்ரீனா ஆக்கிரமித்துள்ளது. இதையொட்டி இரு நாடுகளுக்கிடையேயும் போர் மூளும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பிரிட்டனின் பாரிய போர்க் கப்பல்கள் போருக்குத் தயாராக இத்தீவுகளுக்கு விரைந்து கொண்டிருக்கின்றன. ஆர்ஜென்ரீனாவின் ஆக்கிரமிப்பை ஐ.நா பாதுகாப்புச் சபை கண்டித்துள்ளதுடன் ஆர்ஜென்ரீனாவின் படைகளை தீவிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் கோரியுள்ளது. பிரிட்டன் ஆர்ஜென்ரீனாவுடனான தனது ராஜீக தொடர்புகளைத் துண்டித்துள்ளது. ஐரோப்பிய வர்த்தக சமூகமும் வர்த்தகத் தொடர்புகளை இடைநிறுத்தியுள்ளன. கனடாவும் தொடர்புகளைத் துண்டித்துள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆர்ஜென்ரீனாவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

## அமெரிக்கா:

### அமெரிக்க ஜனாதிபதிக்கு ஆதரவு குறைகிறது!

பெருமளவு மக்களாதரவுடன் பதவிக்கு வந்த அமெரிக்க ஜனாதிபதியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து செல்வதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இவரது இருவருடப் பதவிக்காலப் பூர்த்தியின்போது 'டைம்' பத்திரிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின்படி 52% மான அமெரிக்கர்கள் ரீகன் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடார் எனத் தாம் நம்புவதாக கூறியுள்ளனர். 37% மானோர் மாத்திரம் அவர் மீண்டும் போட்டியிடுவார் என நம்புகின்றனர். அமெரிக்க ஜனாதிபதியின் வெளிநாட்டுக் கொள்கைகள், வரவு செலவுத்திட்ட சமூக நலச் சேவையீட்டு வெட்டுக்கள், பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு, நியூக்கிளியர் ஆயுத உற்பத்திக் கொள்கை போன்றவையே அவரது ஆதரவு வீழ்ச்சியடையக் காரணங்களாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் யூனியன்!

### சோவியத் ஜனாதிபதி சுகயீனம்!

சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்னேவ் கடும் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 75 வயதுடைய இவரது உடல்நிலை சமீபகாலமாக சீர்கெட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக இவர் கலந்து கொள்ள இருந்த நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சோவியத்தின் அடுத்த ஜனாதிபதியாக பிரஷ்னேவின் சகபாடியான திரு. கொன்ஸ்ரன்ரின் செர்னெங்கோ தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போலந்து:

### ஈஸ்டரையொட்டி இராணுவச்சட்டங்கள் தளர்த்தப்பட்டன.

ஈஸ்டர் பண்டிகையினை ஒட்டி போலந்தின் இராணுவ அரசாங்கம் சில சட்டங்களை மக்களுக்குத் தளர்த்தியது. சொந்த மாநிலங்களைவிட்டு இதர மாநிலங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். உணவு விநியோகமும் அதிகரிக்கப்பட்டது. இதே வேளையில் போலந்தின் தடைசெய்யப்பட்ட தொழிற் சங்கமாகிய 'சொலிடாரிற்றி' அரசுக்கெதிரான சில நிமிட வானொலிச் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இராணுவச் சட்டக் கொடுமைகளையும் தொழிற்சங்கச் செய்திகளையும் இது மக்களுக்கு அறிவிக்கிறது.

## மேற்கு ஜேர்மனி!

### சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்!

அரசியல் அடைக்கலம் கோருவோரை கட்டாயமாக நகரைச் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபடுத்தும் மேற்கு ஜேர்மன் அரசின் செயலை சர்வதேச மன்னிப்புச் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

### நியூக்கிளியர் ஆயுதத்திற்கு கடும் எதிர்ப்பு!

சமீபத்தில் ஈஸ்டர் பண்டிகையின் போது 'சமாதானத்தை நாடும் இயக்கத்தினர்' நியூக்கிளியர் ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டுமென்றும் ஜேர்மனியிலிருந்து அமெரிக்க ஏவுகணைகளை அகற்ற வேண்டுமென்றும் கோரி நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தில் 4,80,000 பேர் கலந்து கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஐரோப்பாவில் நியூக்கிளியர் எதிர்ப்பு வளர்ந்து வருவதினையும் அமெரிக்காவின் செல்வாக்கு குறைந்து செல்வதினையும் அடுக்கடுக்காய் நடக்கும் இம்மாபெரும் எதிர்ப்பு ஊர்வலங்கள் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூர்;

### சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டுத் தொழிலாளருக்கு புதிய வரி!

சிங்கப்பூரில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள நிறுவனங்கள் அவர்களது சம்பளத்தில் 30% ஐ அரசுக்கு வரியாகக் கொடுக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. தொழில்நேர்த்தி குறைந்த ஊழியர்களை நிறுவனங்கள் வேலைக்குத் திரட்டுவதை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவே இவ்வரி விதிக்கப்படுகிறதென அரசு தெரிவிக்கிறது. 350 அமெரிக்க டொலருக்கு (750 சிங்கப்பூர் டொலர்) குறைவாக சம்பளம் எடுக்கும் ஊழியருக்கே இது பொருந்தும். இவ்வரிவிதிப்பால் சிங்கப்பூரில் பணிபுரியும் பல இலங்கையர் பாதிக்கப்படுவர் எனக் கருதப்படுகிறது.

## மத்திய கிழக்கு!

### மத்திய கிழக்கில் பதட்ட நிலை!

இஸ்லாத்தின் புனித ஸ்தலங்களில் ஒன்றாகிய ஜெருசலேத்தில் உள்ள ஓமார் பள்ளிவாசல் அருகே இரு அரபுக்களை யூத அமெரிக்கர் ஒருவர் சுட்டுக் கொன்றதையிட்டு மத்திய கிழக்கில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. இச்செயலுக்கு அரபு நாடுகள் இஸ்ரேலை குற்றம் சாட்டியதுடன் அடையாள வேலை நிறுத்தம், கடையடைப்பு, ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டன.

### ஈராக்குடனான எல்லையை சிரியா மூடியது.

ஈராக்குடனான தன்னுடைய 360 மைல் நீளமான கிழக்கு எல்லையை சிரியா மூடியுள்ளது. இருநாடுகளுக்கிடையிலுமான உறவுகள் சீர்கேடடைந்துள்ளன. ஈராக் அரசை மக்கள் கவிழ்க்க வேண்டும் என்றும் அதற்கு சிரியா துணை நிற்கும் எனவும் சிரிய வெளிநாட்டமைச்சர் அறைகூவல் விடுத்துள்ளார்.

### இஸ்ரேலுக்கு பாலஸ்தீனிய இயக்கம் எச்சரிக்கை!

இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் மேற்குக் கரையிலும், காஸாப் பகுதியிலும் தொடர்ந்து நடைபெறும் வன்முறைகளை நாம் கைகட்டிப் பார்த்திருக்க முடியாது என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் மார்க்ஸீயக் குழுத் தலைவர் இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். பாலஸ்தீனிய இயக்கத்தின் எட்டுக் குழுக்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் பாலஸ்தீனிய இயக்கத் தலைவர் யசீர் அரபாத் ராஜதந்திர நடவடிக்கை மேற்கொள்வதையே விரும்புவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபகண்டம்:

### வங்காளதேசம்:

#### ஆயுதப்படைகள் அட்டகாசம்!

வங்காள தேசத்தில் இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் ஆயுதப்படைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாம். வீதிகளில் வைத்து பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். முக்காடு போடாத பெண்கள் இம்சிக்கப்படுகின்றனர். ஆனால் இவற்றுக்கு தாம் பொறுப்பில்லை என்று இராணுவ ஆட்சியாளர் கூறுகின்றனர்.

### இந்தியா:

#### ஆச்சாரிய விநோபாவே காலமானார்.

பழம்பெரும் காந்தியவாதியான ஆச்சாரிய விநோபாவே தமது 84 வது வயதில் மாரடைப்பினால் காலமானார். ஆயிரக்கணக்கான மக்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

#### கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி.

கேரளாவில் 80 நாட்களாகப் பதவியிலிருந்த இந்திரா காங்கிரஸ் கூட்டணி அமைச்சரவை ராஜினாமாச் செய்தது. அதைத் தொடர்ந்து சட்டசபை கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் இம்மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றி!

இந்திய ராஜ்யசபையின் காலியிடங்களுக்கு சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றுள்ளது. 49 இடங்களில் போட்டியிட்ட இக்கட்சி ஒரேயொரு இடத்தில் மட்டும் தோல்வியடைந்துள்ளது.

### கௌதமாலா:

#### கௌதமாலாவில் கடும் சண்டை!

கௌதமாலாவில் சமீபத்தில் இடதுசாரிக் கொரில்லாக்களுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் நடந்த கடும் சண்டையில் 13 வீரர்கள் கொரில்லாக்களால் கொல்லப்பட்டனர். கௌதமாலாவில் இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் கொரில்லாக்களின் போர் தீவிரமடைந்துள்ளது.

### எல்சல்வடோர்:

#### ஆட்சியமைப்பதில் இழுபறி

தேர்தல் முடிவுகளையடுத்து ஆட்சியமைப்பதில் எல்சல்வடோரில் பெரும் இழுபறி ஏற்பட்டுள்ளது. தற்போதைய ஆளும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியுடன் வலதுசாரிக் கட்சியெதுவும் கூட்டுச் சேர மறுத்துள்ளதால் சிக்கலான நிலை தோன்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ணகுமார்.
(கருத்தான்.)

நண்ப,

இழந்து விட்ட ஈழத்தினை
மீட்கும் போரினிலே - நீ
நெருக்கு நேராய் நின்று
போர் செய்தாய் - உன்
நெஞ்சினிலே பாவிகளின்
குண்டுகளோ பரிசாய் ஏற்று
உன் நெஞ்சைத் துளைத்த
அந்தக் குண்டுகள் - எம்
நெஞ்சை மொய்த்திருக்கக்
கூடாதா?
உன் வீரப் புகழைக் கூற
வார்த்தைகளைக் காணவில்லை
- நமக்கே
திரும்பி வரா இடத்துக்கு - நீ
சென்று விட்டாலும்
நிச்சயம் நீ வருவாய்....
வாழ்வாய்
மலரும் தமிழ் ஈழத்தில்...
மக்களின் நெஞ்சங்களில்.

## பிரான்சு தமிழர் இயக்கத்தின் ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமீபத்தில் நடைபெற்ற பிரெஞ்சிந்தியர் கலாச்சாரக் கழக - நிறுவன தினவிழாவையொட்டி மேற்படி கழகத்தின் வெளியீட்டு துண்டுப்பிரசுரத்தில் ஈழத் தமிழ் மக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'இலங்கை வாழ் சிங்கள மக்களின் வெண்மை மிகு உள்ளங்களும்' என்று குறிப்பிடப்பட்டிருந்ததும் அதனால் பிரான்சில் வசிக்கும் தமிழ் ஈழ மக்கள் அதிருப்தியடைந்ததும் அனைவரும் அறிந்ததே.

இதனையொட்டி பிரான்சுத் தமிழர் இயக்கம் தன்னுடைய பலத்த ஆட்சேபனையை மேற்படி கழகத்துக்குத் தெரிவித்திருந்தது. இதற்கு அவ்வாக்கியம் 'தமிழ் மக்களின் வெண்மை மிகு உள்ளங்களும்' என்றே அமைய வேண்டும் என்றும் நடந்த தவறுக்கு தாம் வருந்தும் தெரிவிப்பதாகவும் கழகத் தலைவர் திரு. லே.·க்ல் ராமச்சந்திரா அவர்கள் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீற்றம் கொள் சிறுத்தையாக...

அறிவற்ற அரசே நீ அன்று - தமிழீழ
வெறி கொண்ட இளைஞரை - நீதி
நெறியற்று நெடுங்காலம் சிறை வைத்தாய் - மத
வெறி பிடித்த நீ இன்று
பொறிக்கின்றாய் புத்தர் சிலை நாடெங்கும்
இடியிடியா உன்படை வைத்தாய் காவலாக - நம்
குறிக்கோளோ ஒன்றது - தமிழன்
என்றே மீட்பான் தான் இழந்த தமிழீழம்.

நரிப்புத்தி கொண்ட நாயக்கவம்சம்
திரித்தது நம் சரித்திரத்தை
எரித்தது எம் உத்தம நூல்களை
அரியணையில் நம் தமிழ் அமர
உரிய இடத்தை எமது ஈழம் பெற
சீற்றம் கொள் தோழா சிறுத்தையாக!

- கிருஷ்ணன் -

* * * * * * * * * * * * * * * * * * * * * * * *

### தேசியவிடுதலைப் போர்கள்.

வரப்போகின்ற உலகப்புரட்சியின் தீர்மானமான போர்களிலே, தேசிய விடுதலை என்பதை முதற் குறிக்கோளாகக் கொண்டுள்ள உலகமக்களில் பெரும்பான்மையோரது இயக்கம் முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகத் திரும்பும் என்பதும், நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் கூடுதலான புரட்சிப் பங்கை வகிக்கக்கூடும் என்பதும் தெளிவாகிவிட்டது. உழைக்கும் மக்கள் திரளினர் கீழைத்தேய நாடுகளில் உள்ள உழவர்கள் - இன்னும் பிற்பட்டவர்களாக இருந்த போதிலும் உலகப்புரட்சியின் இனிவருகின்ற கட்டங்களில் அவர்கள் மிகவும் முக்கியமான புரட்சிகரப் பங்கினை வகிப்பார்கள்.

- தோழர் லெனின் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சு தமிழர்களின் சார்பில் பிரான்சு தமிழர் இயக்கத்தினால் சிறீலங்கா அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து இருந்தி-படுத்தப்பட்ட 'உண்ணாவிரதப் போரா-ட்டம்' பற்றிய அறிவித்தல்:

இடம் : ANGLE ASTORG- ROQUEPINE

METRO: ST. AUGUSTIN.

காலம் : 10 வைகாசி 1982. <10 MAI 1982>
காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை.

பொருள்: அண்மையில் நிரந்தரமாக்கப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தினை அகற்றும்படி சிறீலங்கா அரசைக் கோரியும், நீதி விசாரணைகளின்றி சிறைச்சாலையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்படும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யும்படியும் கோரி உண்ணாவிரதப் போராட்டம்.

உண்ணாவிரதத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் 10.05.82 காலை 8.30 மணியளவில் ST. AUGUSTIN METRO அருகில் கூடும்படி தாழ்மையுடன் வேண்டப்படுகின்றனர். சிறீலங்கா அரசுக்கு எதிரான இந்த சாத்வீகப் போராட்டத்தில் பிரான்சில் வாழும் ஈ.ழத்தமிழ் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறீலங்கா அரசுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்

அமைப்பாளர்களின் சார்பில்

பிரான்சு தமிழர் இயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org